**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : திருமதி **V. பார்கவி, B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம் சித்திரை மாதம் 08-ம்நாள்

------

**அசல் வழக்கு எண். 240/2019 -ல் இடைமனு எண். 01/2021**

1. மணிமேகலை
2. ரவிச்சந்திரன்
3. நடராஜன் ( இறந்தார்)
4. மணிவண்ணன்
5. செல்வகுமார் ...1 முதல் 5 மனுதாரர்கள்/வாதிகள்
6. லதா
7. மணிகண்டன்
8. தினேஷ்குமார் ..6 முதல் 8 மனுதாரர்கள்/ இறந்த 3-ம் வாதியின் வாரிசுதாரர்கள்

...எதிர்...

1. ராஜாதுரை
2. சின்னதுரை
3. கோபாலகிருஷ்ணன்
4. கார்த்திகேயன்
5. நளமகராஜன் ..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 29.03.2022 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். சேயோன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு எஸ். முத்துக்குமார் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரையில் எனது பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இறந்த 3-ம் மனுதாரர்/3-ம் வாதிக்கு வாரிசுகள் சேர்க்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 261 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/ வாதிகளால் இம்மனு காலவரையறைச்சட்டம் பிரிவு 5 ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது 3-ம் மனுதாரா்/ 3-ம் வாதி 05.11.2020-ம் தேதியன்று இறந்துவிட்டார். இறந்த 3-ம் வாதிக்கு வாரிசுகள் சேர்த்து இந்த அசல் வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டியது அவசியமானது. இறந்த 3-ம் வாதிக்கு வாரிசுகள் சேர்க்க மனுத் தாக்கல் செய்வதற்கான விவரங்கள் சேகரிப்பதில் 261 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே இறந்த 3-ம்வாதியின் வாரிசுகள் சேர்க்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 261 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. **4-ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1,2,3,5-ம் எதிர்மனுதாரர்களால் தங்களுடையதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

மனு சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. இறந்த நடராஜனின் சகோதரர்களில் ஒருவரான ராமச்சந்திரனின் வாரிசுகள் 1,2 வாதிகள். மற்றொரு சகோதரரான கோபாலகிருஷ்ணனின் வாரிசான 4-ம்வாதி, மற்றொரு சகோதரரின் வாரிசுதான் 5-ம் வாதி. இவ்வாறு ஒவ்வொருவரும் ரத்த பந்தமுடைய உறவுக்காரர்கள். 3-ம் வாதி இறந்துபோன பின்பு 261 நாட்கள் கழித்து இறந்த நடராஜனின் வாரிசுகளை சேர்க்க வேண்டுமென மனுத்தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. மனுதாரர்கள் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் தகுந்த காரணம் குறிப்பிடாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. **இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **தீர்வு**

மனுதாரர்கள் தரப்பில் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கும்போது 3-ம் மனுதாரா்/ 3-ம் வாதி 05.11.2020-ம் தேதியன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 3-ம் வாதிக்கு வாரிசுகள் சேர்த்து இந்த அசல் வழக்கை தொடர்ந்து நடத்த வேண்டியது அவசியமானது என்றும்,

இறந்த 3-ம் வாதிக்கு வாரிசுகள் சேர்க்க மனுத் தாக்கல் செய்வதற்கான விவரங்கள் சேகரிப்பதில் 261 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், எனவே இறந்த 3-ம்வாதியின் வாரிசுகள் சேர்க்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 261 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக் கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்த நடராஜனின் சகோதரர்களில் ஒருவரான ராமச்சந்திரனின் வாரிசுகள் 1,2 வாதிகள் என்றும், மற்றொரு சகோதரரான கோபாலகிருஷ்ணனின் வாரிசான 4-ம்வாதி என்றும், மற்றொரு சகோதரரின் வாரிசுதான் 5-ம் வாதி என்றும், இவ்வாறு ஒவ்வொருவரும் ரத்த பந்தமுடைைய உறவுக்காரர்கள் என்றும், 3-ம் வாதி இறந்துபோன பின்பு 261 நாட்கள் கழித்து இறந்த நடராஜனின் வாரிசுகளை சேர்க்க வேண்டுமென மனுத்தாக்கல் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றும், மனுதாரர்கள் மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் தகுந்த காரணம் குறிப்பிடாமல் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் 3-ம் மனுதாரர்/1-ம் பிரதிவாதி வழக்கு நிலுவையில் இருக்கும்போது 05.11.2020அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளாக 6 முதல் 8 மனுதாரர்களை சேர்ப்பதற்கு விவரங்கள் சேகரிப்பதற்கு 261 நாட்கள் காலதாமதமாகிவிட்டது என்றும், அந்த காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் இம்மனுவில் கோரியுள்ளார்கள். எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்த 3-ம் வாதியின் வாரிசுகள் 6 முதல் 8 மனுதாரர்கள் என்பதைப் பொறுத்து எவ்விதமான ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் தரப்பில் 261 நாட்கள் காலதாமதம் செய்யப்பட்டதற்கான சரியான காரணம் எதுவும் மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை. இருப்பினும் இது விசாரணை நீதமன்றமாக இருப்பதாலும் வழக்கு சூழ்நிலையை கருத்தில்கொண்டும் மனுதாரர்கள்/ வாதிகளுக்கு இறந்த3-ம் வாதியின் வாரிசுகள் சேர்ப்பதற்கு இந்த வழக்கில் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற எண்ணத்தில் இறந்த 3-ம் வாதியின் வாரிசுகளான 6 முதல் 8 மனுதாரர்களை சேர்க்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 261 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கது என்றும், மனுவின் தன்மை கருதி இம்மனுவின் செலவுத்தொகையை இருதரப்பினரும் அவரவர் செலவுத்தொகையை அவரவர்களே

ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. முடிவில், இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2022-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 -ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

<u>பின் இணைப்பு</u>

| | |
|---|---|
| <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | - இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u> | -இல்லை- |
| <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | -இல்லை- |
| <u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> | - இல்லை- |

மா.உ.நீ

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 240/2019ல்
இடைமனு எண். 01/2021
நாள் - 21.04.2022.